₹100/-

ஞானகுரு

4 - 8

மகிழ்ச்சி

ஆவணி 2025

எஸ்.கே.முருகன்

வண்ணத்துப் பூச்சியாக மாறிவிடு..!

Online கவுன்சிலிங்
WhatsApp Call Only

கணவன், மனைவி, குழந்தைகள் உறவுச் சிக்கல்களுக்குத் தீர்வு

மனவள ஆலோசகர்
எஸ்.கே.முருகன்
ஞானகுரு கவுன்சிலிங்.
முன்பதிவுக்கு : +91 80725 89355

www.gyaanaguru.com

ஆசிரியர் பக்கம்

யாரும் யாருக்காகவும் இல்லை

மருந்து கசப்பாக இருக்கும், ஆனால் உடலை குணப்படுத்தும். அதேபோல் ஒருசில வார்த்தைகள் கேட்பதற்கு சங்கடமாக இருக்கும். ஆனால், உண்மையாக இருக்கும். அப்படிப்பட்ட ஒரு நிஜம், யாரும் யாருக்காகவும் இல்லை.

எல்லோரும் எப்போதும் நம்முடன் இருக்க வேண்டும் என்று ஆசைப்படலாம். அப்பா, அம்மா, சகோதரர்கள், சகோதரிகள், பிள்ளை என்று எல்லோரும் ஒன்றாக சேர்ந்தும், புரிந்தும் வாழ்வது விருப்பமாக இருக்கலாம். ஆனால், வாழ்க்கை என்பது ஒரு பயணம். இந்த பயணத்தில் எல்லா மனிதர்களும் சக பயணிகள் மட்டுமே. யாரும் நிரந்தரமாக வாழ்க்கையின் துணையாக இருக்க முடியாது. இந்த உண்மையை உணர்ந்துகொண்டால் ஒரு நல்ல மாற்றம் நிகழும்.

வருத்தம், ஏமாற்றம், குழப்பம், தோல்வி, துன்பத்துக்கு நாமே காரணம் என்பதை புரிந்துகொள்ள முடியும். யாரையும் சார்ந்திருக்காமல் எதையும் எதிர்கொள்ளும் மனநிலையில் வாழ முடியும்.

மனித உறவுகள், நட்புகள், சொந்தம், பந்தம் எல்லாம் தற்காலிகம் மட்டுமே. மனிதர்கள் விலகுதலும் சேர்தலும் இயற்கையின் நியதி. ஒருவரின் வாழ்க்கையில் மற்றவர்களின் பங்கு என்பது அந்தந்த சூழ்நிலைக்கு ஏற்ப மாறிக்கொண்டே இருக்கும்.

எனக்காக நீ, உனக்காக நான் என்று பேசுவது எல்லாம் அந்தந்த நேரத்துத் தேவை மட்டுமே தவிர, நிஜம் அல்ல. உண்மையில், ஒவ்வொரு மனிதரும் தனித்தனி தீவு. ஒவ்வொரு மனிதரும் சுதந்திரமானவர்கள்.

அதனால்தான் பிள்ளை செத்துப் போனால் அம்மாக்கள் சாவதில்லை. மனைவி செத்துப்போனால், கணவன் சாவதில்லை. அவரவர் வாழ்க்கை அவரவருக்கு மட்டுமே சொந்தமானது. யாரும் யாருக்காகவும் இல்லை என்பதை வாழ்க்கை கற்றுத் தருவதற்கு முன்னர் புரிந்துகொள்ளுங்கள். அதுவே, மகிழ்ச்சி.

www.gyaanaguru.com

சண்டை போடாத தம்பதியாக வாழ ஒரே ஒரு வழி

கல்யாணம் ஆனதும் பெண்கள் கண்டு பிடிக்கும் முதல் கண்டுபிடிப்பே... கணவனுக்கு ஒன்றுமே தெரியாது என்பதுதான். ஆனால், இதை கடைசி வரையிலும் ஆண்களால் கண்டுபிடிக்கவே முடிவதில்லை, அதனால் தான் கணவன், மனைவிக்குள் இத்தனை சண்டைகள் நடக்கின்றன.

கல்யாணத்திற்கு பிறகு இப்படித்தான் வாழ வேண்டும் என்பதற்கு எந்த ஒரு இலக்கணமும் கிடையாது. எனவே, ஒவ்வொருவரும் தாம்பத்தியம் என்ற கிணற்றில் தள்ளி விடப்பட்டு அவர்களாகவே நீச்சல் கற்றுகொள் கிறார்கள்.. இதில் கரை சேர்வோரும் உண்டு, மூச்சு முட்டி மூழ்குவோரும் உண்டு.

மருத்துவ ஆய்வு படி, ஒரு பெண் 32 வயதில் நல்ல மனப்பக்குவம் அடைந்து விடுகின்றாள். ஒரு ஆண் பக்குவம் அடைய 43 வயது ஆகின்றது. இந்த மனப்பக்குவம் என்பது சண்டையை எளிதில் தவிர்க்கும் அல்லது சமாளிக்கும் வழியை அறிந்துகொள்வதே தவிர, சண்டை இல்லாமல் வாழ்வது அல்ல.

இயல்பாகவே பெண்கள் நிறைய கேள்வி கேட்பவர்கள். ஆண்கள் இயல்பாகவே, கேள்வி களை விரும்பாதவர்கள். இதை சொல்வதற்கு ஒரு பிரபல நகைச்சுவை உண்டு. அதாவது, அமெரிக் காவை கண்டு பிடிக்கும் முன் கொலம்பஸுக்கு திருமணம் ஆகியிருந்தால், அவன் கிளம்பும்போது கீழ்க்கண்ட கேள்விகள் கேட்கப்பட்டிருக்கும்.

எங்கே போறீங்க? யார்கூட போறீங்க? ஏன் போறீங்க? எப்படி போறீங்க? எப்ப திரும்ப வருவீங்க? எனக்கு என்ன வாங்கிட்டு வருவீங்க? கண்டிப்பாக நீங்கள் தான் போக வேண்டுமா? உங்களுக்கு எப்படிப்பட்ட ஆபத்துகள் ஏற்படும்? என்றெல்லாம் வரிசையாக நூற்றுக்கணக்கான கேள்விகளை மனைவி கேட்டிருப்பாள். ஒரு மனைவி யாக இந்த கேள்விகள் நியாயமாகவே இருக்கும். எனவே, இந்த கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல், கொலம்பஸ் நிச்சயம் பயணத்தை நிறுத்தியிருப்பான்.

தினமும் ஆண்கள் பேசுவதை விட இரண்டு மடங்கு அதிகமாக பெண் கள் பேசுகிறார்கள். எனவே, அவள் சாதாரணமாகப் பேசுவதும் சண்டை யாக மாறிவிடுவது உண்டு. இந்த

www.gyaanaguru.com

www.gyaanaguru.com

தங்களைத் தவிர மற்ற எல்லா தம்பதியும் நிம்மதியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ்வது போன்று நினைப்பதுதான் பெரும்பாலான தம்பதிகளின் ஆதங்கம். வீட்டுக்கு வீடு வாசல்படி. எல்லா வீடுகளிலும் பிரச்னை உண்டு என்பதை ஒவ்வொரு ஆணும், பெண்ணும் புரிந்துகொள்ள வேண்டும்.



விஷயத்தில் காதல் திருமணம் உயர்ந்தது அல்லது பெற்றோர் முடித்துவைக்கும் திருமணமே நிலைத்து நிற்கும் என்றெல்லாம் எந்த முடிவுக்கும் வந்துவிட முடியாது. பிரிவதும், சேர்ந்திருப்பதும் சம்பந்தப்பட்ட இரண்டு பேரின் மனம் சம்பந்தப்பட்டது.

ஏனென்றால், காதலித்து கல்யாணம் செய்தவரும் கட்டிலைப் பிரித்து போட்டதுண்டு. பெற்றோர் நிச்சயித்த திருமணத்திலும் பேரன்பு பெருக்கெடுப்பதுண்டு. அன்பிருந்தும் பணமிருந்தும் சந்ததி இல்லாத குடும்பங்களும் உண்டு. சந்ததி இருக்கும் குடும்பங்கள் சாப்பாட்டுக்கே கஷ்டபடுவதுண்டு. ஒவ்வொரு நபருக்கும் ஏதாவது ஒரு பிரச்னை இருக்கவே செய்கிறது. அழகாக இல்லை என்றால் பிரச்னை, அழகாக இருப்பதை கவனிக்கவில்லை என்று பிரச்னை. சம்பாதிப்பது குடும்பத்திற்கு போதவில்லை என்று ஒரு பிரச்னை, அதிகம் சம்பாதிப்பவர் குடும்பத்திற்கு போதிய நேரம் ஒதுக்கவில்லை என்று பிரச்னை.

தங்களைத் தவிர மற்ற எல்லா தம்பதியும் நிம்மதியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ்வது போன்று நினைப்பதுதான் பெரும்பாலான தம்பதிகளின் ஆதங்கம். வீட்டுக்கு வீடு வாசல்படி. எல்லா வீடுகளிலும் பிரச்னை உண்டு என்பதை ஒவ்வொரு ஆணும், பெண்ணும் புரிந்துகொள்ள வேண்டும். அதேபோல், எந்த சண்டையும் தானே உருவாவதில்லை, உருவாக்கப்படுகிறது.

‘ஒரு கத்திரிக்காய்கூட சரியா வாங்கத் தெரியவில்லை’ என்று மனைவி மட்டம் தட்டியதும், ‘அப்படின்னா நீயே போய் வாங்குடி’ என்று கணவன் எகிறும்போது சண்டையாகிறது.

’நீ செஞ்ச பிரியாணியை வாயிலே வைக்க முடியலை... செம உப்பு’ என்று கணவன் முகம் சுளித்து சொன்னதும், ‘எனக்கு தெரிந்த லட்சணம் இவ்ளோதான் ..நீங்க உங்க அம்மா வீட்டுக்கு போய் சாப்பிடுங்க’ என்று மனைவி பதில் சொன்னதும் பூகம்பம் ஆரம்பம். சண்டை போடும் தம்பதியர், இணைந்து வாழ்வதற்கு ஒரு புதிய டெக்னிக் சொல்கிறார்கள், மனநல ஆலோசகர்கள். அதன்படி, மனைவியைக் கணவன் ‘அம்மா’ என்றும், கணவனை மனைவி, ‘அப்பா’ என்று அழைப்பதும் நல்ல பலன் தருகிறது என்கிறார்கள்.

ஏனென்றால், ஒவ்வொரு ஆணும் அம்மாவைப் போன்ற அன்பான மனைவிக்குத்தான் ஆசைப்படுகிறான். ஒவ்வொரு பெண்ணும் அப்பாவைப் போன்று பாதுகாக்கும் ஆணுக்குத்தான் காத்திருக்கிறாள். எனவே, ‘சொல்லும்மா... சாப்பிட்டியாம்மா என்று ஆண் கேட்பதும் ’என்னப்பா... சாப்பிடுங்கப்பா’ என்று பெண்ணும் பேசத் தொடங்கினால், தம்பதிக்குள் நெருக்கம் அதிகமாகும் என்கிறார்கள்.

சொற்களே செயல்களாகின்றன அப்பா - மகள் உறவும், அம்மா - மகன் உறவும் தலைகீழ் மாற்றம் அடையக்கூடியவை. அதாவது. மனைவி தனக்கு மகள் என்று கணவன் நினைக்கத் தொடங்குவதும், கணவனை தன்னுடைய மகனாக மனைவி நினைப்பதும் புதிய மாற்றமாக இருக்கும். ஏனென்றால், மகன் அல்லது மகள் ஏதேனும் தவறு செய்யும்போது, பெற்றோர் எத்தனை கண்டிப்பு காட்டினாலும் அன்பு காட்டுவதை நிறுத்துவதில்லை. அதே நிலை தம்பதி உறவுக்குள்ளும் உருவாகும்.

எத்தனை திட்டினாலும் பிள்ளையை எந்த ஒரு தாயும் பட்டினி போட மாட்டாள். பிள்ளை மீது எத்தனை கோபம் இருந்தாலும், ஏதேனும் ஒன்று வேண்டும் என கேட்டுவிட்டால், அதை வாங்கித்தருவதற்கு தந்தை மறுக்க மாட்டார். அத்தகைய அன்புதான் கணவன், மனைவிக்குள் வர வேண்டும். அத்தகைய மனநிலைக்கு தம்பதி வந்துவிட்டால், அந்த குடும்பத்தில் சண்டைகள் நடந்தாலும், பிரிவுக்கு இடமில்லை.

www.gyaanaguru.com

www.gyaanaguru.com

அழகுக்கு யார் பொறுப்பு..?

“எந்த பட்டாம்பூச்சியும் அதன் வண்ணத்திற்காக பெருமைப் படுவதில்லை. அழகைக் காட்டி பரிசும் பாராட்டும் கேட்பதில்லை. இன்னும் சொல்லப் போனால், அந்த வண்ணத்துப் பூச்சிகளுக்கு, அதனிடம் உள்ள அழகான வண்ணம்கூட தெரிவதே இல்லை” என்று கல்லூரிப் பெண்ணுக்கு பாடம் நடத்தினார் ஞானகுரு.

“அப்படியென்றால் அழகை கொண்டாடக்கூடாதா?” கேள்வி கேட்டாள் அந்த அழகி.

“உன் அழகை நீ எதற்காக கொண்டாட வேண்டும்? அழகு என்று எதை நீ நினைக்கிறாயோ... அது நிரந்தரமானது அல்ல. நீ கோபமாக இருக்கும்போது, வருத்தத்தில், சோகத்தில், ஏக்கத்தில், பொறாமையில் இருக்கும்போது உன் முகத்தை கண்ணாடியில் பார்த்திருக்கிறாயா..? அப்போது தெரியும் உன் முகத்தை நீயே அழகு ஏன்று ஏற்றுக்கொள்ள மாட்டாய். உன் மனதில் ஆனந்தம் இருக்கும் போது மட்டும்தான் உன் அழகை உன்னாலே ரசிக்க முடியும். அதனால், அந்த அழகை கொண்டாடுவதில் எந்த அர்த்தமும் இல்லை. வயிற்றுப் பசியில் இருக்கும் ஆணுக்கு எந்த பெண்ணும் அழகாகத் தெரியமாட்டாள். கண் தெரியாத ஒருவனுக்கு உன் அழகு என்ன சொல்லிக்கொடுக்கும்?

நீ அழகாகப் படைக்கப்பட்டிருக்கிறாய் என்றால், அதில் உன்னுடைய பங்கு எதுவும் இல்லை. அழகை பராமரிக் கிறாய் என்றாலும், அதன் முதல் உரிமை உன் பெற்றோரு டையது. அதனால் அது பெற்றோரின் சொத்து. அதனை வரமாக மாற்றிக்கொள்வதும் சாபமாக ஆக்கிக்கொள்வதும் உன் கையில்தான் இருக்கிறது. ஆண்களைப் பிடிக்கும் தூண்டிலாக அழகை பயன்படுத்துவாய் என்றால், நிச்சயம் ஆண்கள் மாட்டத்தான் செய்வார்கள். ஆனால், உன்னைப் போல் ஏராளமான அழகிகள் உண்டு, அனைவரிடமும் தூண்டில் உண்டு. உன்னிடம் சிக்கிய ஆண், பிறர் தூண்டிலிலும் சிக்குவான். ஏனென்றால், ஆண் எந்த அழகையும் நிரந்தரமாக ரசிப்பதில்லை. அவனுக்கு எல்லா அழகும் இருட்டில் காணாமல் போய்விடும்.

ஆசையாக வாங்கிய கார் மீது ஆண் மிகவும் அன்பு வைத்திருப்பான். எப்போதும் அதில் பயணிக்க விரும்புவான். ஆனால், அதைவிட நல்ல கார் ஒன்று வாங்கிவிட்டால், பழைய காரின் கதி என்னவாகும் என்பது உனக்கே தெரியும். அதனால் அழகுக்கு பெருமை கொள்ளாதே. எப்போதும் உன் தனித்தன் மையை, உன் திறமையைக் காட்டி வெற்றிகொள். அந்த தனித்தன்மை இந்த உலகில் வேறு எந்த ஒரு மனிதரிடமும் இருக்கவே செய்யாது” என்றார் ஞானகுரு.

கல்லூரிப் பெண் இன்னமும் சமாதானம் அடைய வில்லை என்பது அவள் கண்களில் தெரிந்தது.

www.gyaanaguru.com



“அழுகை என்பது கோழைத் தனமல்ல. அது மன அழுத்தத்தை அகற்றும் அற்புத மருந்து. அழத்தெரியாத ஆண்களும் பெண்களும்தான் கல்நெஞ்சக்காரர்களாக, பிறரை துன்புறுத்துபவராக இருப்பார்கள். அதனால் அழுகை நல்லது, ஆனால், அடிக்கடி அழுவது ஆபத்து, உன் மனதை பலப்படுத்த வேண்டும் என்ற அறிகுறி அது” என்று ஆசிரியை ஒருவருக்கு ஆறுதல் கூறிக்கொண்டு இருந்தார் ஞானகுரு.

“குழந்தைகள்தானே அடிக்கடி அழுகிறார்களே..?”

‘‘குழந்தைகளுக்கு மன வலிமையும் தன்னம்பிக்கையும் குறைவு. அதேநேரம் பயம் அதிகம். அதைத்தான் அழுகையாக வெளிப்படுத்து கிறார்கள். வளர்ந்து மன வலிமை அதிகரிக்கும் தருணத்தில், அவர்களின் அழுகை குறைந்து போகிறது. பொதுவாகவே அழுகை என்பது இயலாமையால், கோபத்தால், ஆனந்தத்தால், வெற்றியால், துக்கத்தால், அவமானத்தால் வரலாம். எப்போதாவது ஒரு முறை அழும்போது அந்த அழுகைக்கு மதிப்பும் மரியாதையும் கிடைக்கும். எப்போதும் அழும் நபர்களுக்கு பரிதாபம்கூடக் கிடைக்காது. அழுது அடம்பிடித்து காரியம் சாதிக்கும் குழந்தைகளின் குணத்தை சில பெண்கள் வளர்ந்த பிறகும் கடைபிடிக்கிறார்கள் என்றால், அவர்கள் இன்னமும் வளரவே இல்லை. மனநலத்தில் பாதிப்பு உள்ளது என்றுதான் அர்த்தம்...”

“அழுதாலே மனநலம் பாதிப்பு என்று சொல்லி விடுவீர்களா..?’’ கோபமாகக் கேட்டாள் ஆசிரியை.

“தாங்கமுடியாத உடல் வலி, நோய், காயம் காரணமாக அழுகை வருகிறது என்றால் உடல் நலப் பிரச்னை என்று அர்த்தம். உடலில் எந்த பிரச்னையும் இல்லாத நேரத்தில், ஒருவருக்கு அடிக்கடி அழுகை வருகிறது என்றால் நிச்சயம் மனம் பாதிக்கப்பட்டுள்ளது என்றுதான் அர்த்தம். நாட்பட்ட கோபம், ஏமாற்றம், பயம், நம்பிக்கை யின்மை, அவமானம் போன்றவை மனதிற்குள் நீண்ட நாட்களாக பதுங்கியிருக்கும் போது, மன அழுத்தமாக மாறிவிடுகிறது. யாரேனும் ஒருவர் ஒரே ஒரு வார்த்தை தவறாகப் பேசினாலும், திட்டினாலும் அத்தனை மன அழுத்தமும் ஒன்று சேர்ந்து வெடித்து அழுகையாக வெளிப்படுகிறது. ஆகவே அடிக்கடி அழுபவர்கள் ஆறுதல் அடைவதில்லை. மேலும் மேலும் துயரத்திற்கே ஆளாகிறார்கள்...”

”அடிக்கடி அழும் நபர்கள் என்னதான் செய்ய வேண்டும்..?”

‘‘எந்த விஷயங்களுக்கு எல்லாம் அழுகை வருகிறது என்பதை தீவிரமாக ஆராய்ந்து பார்த்தாலே, உண்மையைக் கண்டுபிடித்துவிட முடியும். அவமானம் செய்யும்போது அழுகை வருகிறதா அல்லது யாரேனும் அதட்டும் நேரத்தில், ஏமாற்றம் வரும் நேரத்தில் அழுகை வருகிறதா என்று பார்த்தாலே மனதில் தேங்கி நிற்கும் குறையைக் கண்டுபிடித்துவிட முடியும். எது பிரச்னையோ அதுதான் தீர்வும் ஆகும். ஆம், அந்த பிரச்னை ஏன் ஏற்பட்டது, எப்படி வளர்ந்து நிற்கிறது என்பதை மனம் விட்டு பேசினாலே போதும், அதன்பிறகு சடக்கென்று அழுகை தோன்றாது. இதை கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு குழப்பத்தில் இருந்தால் நீ மருத்துவரைத் தான் சந்திக்க வேண்டும்...” என்றார் ஞானகுரு.

”அப்படியென்றால் ஆனந்தக் கண்ணீர்..?”

“அது வரம்... அடிக்கடி கிடைப்பதற்கு ஆசைப்படு”

சிந்தனையில் ஆழ்ந்தார் ஆசிரியை.”

நாளைக்கும் உணவு கிடைக்கும்?

வீட்டை விட்டு வெளியே கிளம்பும் போது பூனை குறுக்கே போய்விட்டால் சட்டென அதிர்ந்து விடுகிறார்கள். அது இடமிருந்து வலம் போனதா, வலமிருந்து இடம் போனதா... கருப்புப் பூனையா அல்லது கொஞ்சம் வெள்ளை நிறம் கலந்த பூனையா என்றெல்லாம் பார்த்து, சகுனத்தை கணிக்கத் தொடங்கிவிடுகிறார்கள்.

”பூனை குறுக்கே போனால் என்ன அர்த்தம்?”

“அது எங்கேயோ போகிறது என்று அர்த்தம்...”

ஆம், இது கிண்டல் அல்லது நகைச்சுவை பதில் அல்ல. இதுதான் யதார்த்தம். சாதாரணமாக பூனை எங்கேயோ போய்க்கொண்டு இருக்கிறது. நீங்களும் எங்கேயோ போய்க்கொண்டு இருக்கிறீர்கள். அவ்வளவுதான். நீங்கள் என்ன செய்யப்போகிறீர்களோ, அதை பொறுத்தே உங்களுக்குப் பலன் கிடைக்குமே தவிர, குறுக்கே செல்லும் பூனையால் அல்லது தலையை தொட்டுச் செல்லும் காகத்தால் எதுவும் மாறிவிடாது.

“அமைதி வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும்..?”

“போருக்குச் செல்வதற்குத் தயாராக இரு...”

ஆம், இந்த பதிலும் எதிர்மறை பதில் அல்ல. இதுவே சரியான பதில். ஒருவர் போருக்குச் செல்லும் போது எப்படிப்பட்ட மனநிலையில் இருக்க வேண்டும் தெரியுமா..? எது நடந்தாலும் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் இருக்க வேண்டும். அதாவது போரில் பிறர் உயிரை எடுக்க வேண்டி வரலாம் அல்லது தன் உயிரை இழக்க வேண்டி இருக்கலாம். அப்படி தன்னையே இழப்பதற்கு ஒருவன் தயாராக இருந்தால், அவன் மனதில் அமைதி தானாகவே வந்துவிடும்.

”என் எதிர்காலத்துக்குப் போதுமான அளவு சேமிக்க வில்லையே...”

“பிச்சைக்காரனாக மாறி விடு...”

ஆம்... இந்த பதில் உன்னுடைய பயத்தை போக்குவதற்காக சொல்லப்படுகிறது. பயம் இருக்கும் ஒருவனுக்கு எவ்வளவு பணம் சேமிப்பாக இருந்தாலும், அதன் மீது நம்பிக்கை வராது. ‘நாளைக்கும் பணம் கிடைக்குமா, கிடைக்கும் பணம் போதுமான அளவில் இருக்குமா, வயதான பிறகு வரும் நோய்க்கு இந்த பணத்தால் சிகிச்சை தந்துவிட முடியுமா’ என்றெலாம் யோசித்துக்கொண்டே பயத்துடன் வாழ்வார்கள். அவர்களால், சேமித்து வைத்திருக்கும் பணத்தைக் கொண்டு சந்தோஷமாக வாழ முடியாது. எனவே, பிச்சைக்காரன் வாழ்க்கைக்கு ஆசைப்பட வேண்டும். நாளை ஏதாவது கிடைக்கும் என்ற நம்பிக்கை அவனுக்கு உண்டு. அந்த நம்பிக்கைதான் பணத்தின் மீதான பயத்தை குறைக்கும். பணம் இன்றி உலகில் அத்தனை உயிரினங்களும் வாழத்தான் செய்கின்றன என்பதை நினைவில் கொள்.

www.gyaanaguru.com

www.gyaanaguru.com

முதுமை இனிது, நோய் இனிது, மரணம் இனிது

ஆசிர்வதிக்கப்பட்ட மனிதர்கள் யார் தெரியுமா..?

இனி, வேலை செய்து பணம் சம்பாதிக்க வேண்டிய கட்டாயம் இல்லை என்ற முடிவுக்கு வருபவர்கள். எஞ்சிய வாழ்க்கைக்குத் தேவையான பணத்தை ஓய்வூதியமாக அல்லது ஏதேனும் சேமிப்பின் மூலம் பெறுவதாக இருக்கலாம். பிள்ளை அல்லது வேறு யாரோ ஒருவர், எதிர் காலத்துக்கு பொறுப்பை எடுத்துக் கொண்டிருக்கலாம். இன்னும் சுருக்கமாகச் சொல்வது என்றால், பொருளாதார பிரச்னை இல்லாத எதிர்காலம். அப்படியொரு வாழ்க்கை கிடைப்பது வரம்.

ஏனென்றால், வாழ்வின் கடைசி நொடி வரையிலும் உழைத்து சாப்பிட வேண்டிய கட்டாயத்தில்தான் ஏராளமான மனிதர்கள் இருக்கிறார்கள். அப்படி ஒரு தேவை இல்லாத நிலை ஏற்படுகிறது என்றால், அதனை மகிழ்ச்சியாக கொண்டாட வேண்டும்.

ஆனால், பணியில் இருந்து ஓய்வு பெற்ற பிறகும், போதிய அளவுக்குப் பணம் சேமித்து வைத்த பிறகும், எதிர்காலத்தை எப்படி கழிப்பது என்று தெரியாமல் பலரும் தடுமாறுகிறார்கள். இன்னும் சிலர், பணத் தேவை இல்லை என்றாலும் பிஸியாக இருக்க வேண் டும் என்பதற்காக, வாழ்நாள் முழுவதும் ஏதேனும் வேலையின் பின்னே ஓடிக்கொண்டே இருக்கிறார்கள்.

நல்லபடியாக முதுமையை, எஞ்சிய காலத்தை எப்படி கழிப்பது..?

எஞ்சிய காலத்தை, தங்கள் விருப்பப்படி வாழ வேண்டும் என்ற பொறுப்பை, கடமையை ஏற்றுக் கொண்டு செயல்படுவதுதான், மகிழ்ச்சி. நிகழ்காலம் மட்டுமல்ல முதுமை சிறப்பாக நகரவும் பொறுப்பு எடுத்துக்கொள்ள வேண்டியது நீங்கள்தான்.

இந்த காலகட்டத்தில் என்னவெல்லாம் ஆசை மனதில் ஒட்டியிருக்கிறதோ, அவற்றை எல்லாம் முயற்சி செய்து பார்க்கலாம். செடி வளர்த்தல், சினிமா, சுற்றுலா, கதை, கட்டுரை, கவிதை, ஓவியம், இசை என அனைத்து ரசனைகளையும் முயற்சி செய்யலாம்.

இதுவரை பார்க்க முடியாத இடங்களைப் பாருங்கள். விரும்பிய புத்தகங்களைப் படியுங்கள்.

> இதுவரை பார்க்க முடியாத இடங்களைப் பாருங்கள். விரும்பிய புத்தகங்களைப் படியுங்கள். காலை உணவை நிதானமாய் ரசித்து உண்ணுங்கள். மதியம் இரவு நேரத்துக்கு தேவையான அளவு எளிதில் செரிமானம் ஆகக்கூடிய உணவைச் சாப்பிடுங்கள்.

காலை உணவை நிதானமாய் ரசித்து உண்ணுங்கள். மதியம் இரவு நேரத்துக்கு தேவையான அளவு எளிதில் செரிமானம் ஆகக்கூடிய உணவைச் சாப்பிடுங்கள்.

அவ்வப்போது தண்ணீர் அருந்துங்கள். எட்டுமணி நேரம் தூங்குங்கள். பழைய நண்பர்கள், உறவுகளுடன் மனம் விட்டுப் பேசுங்கள், இதில் அவர்கள் பேசுவதேயில்லை, நாமே பேசுகிறோம் என்று ஈகோ பார்க்க வேண்டாம். நினைத்த நேரத்தில் தூங்குங்கள், நினைத்த நேரம் எழுந்தரியுங்கள். ஆனால், போதுமான அளவுக்கு நடைப் பயிற்சி செய்யுங்கள். வாய்விட்டுச் சிரியுங்கள்.

கணவர், மனைவி, உறவுகளுக்கு அன்றாட வேலைகளில் முடிந்த வரை உதவிடுங்கள். மிக மிக நெருக்கமான, நம்பிக்கையானவர்களிடம் மட்டும் உங்கள் சுகத்தையும் துக்கங்களையும் பகிருங்கள். உங்கள் வயதை, அனுபவத்தை காரணம் காட்டி யாருக்கும் ஆலோசனை சொல்ல வேண்டாம். கேட்காமல் சொல்லப்படும் ஆலோசனை எட்டிக்காயாக கசக்கும்.

பிள்ளையோ அல்லது உறவுகளோ தவறான வழியில் செல்வதாகத் தெரிந்தால், மென்மையாக சுட்டிக் காட்டுங்கள். அதனை ஏற்கவில்லை என்றால் கொஞ்சமும் கவலை வேண்டாம். ஏனென்றால், சரியான பாடத்தை அவர்கள் கற்றுக்கொள்ளலாம். இன்னொரு விதமாக சொல்வது என்றால், நீங்கள் நினைப்பது தவறாகவும், அவர்கள் செல்லும் பாதை சரியாகவும் இருக்கலாம். எனவே, எதையும் வலியுறுத்த வேண்டாம்.

மருத்துவப் பரிசோதனைகளை சரியான காலங்களில் செய்யுங்கள். நேரத்துக்கு மருந்து மாத்திரைகளை உட்கொள்ளுங்கள். மருத்துவச் செலவுகளுக்கு முடிந்த வரையிலும் இன்சூரன்ஸ் பயன்படுத்துங்கள்.

டாய்லெட் கதவுகளைப் பூட்டிக் கொள்ளாதீர்கள், தலையணைக்கு அருகில் மொபைல், டார்ச், சாவி வைத்துக் கொள்ளுங்கள். அறிமுகம் இல்லாத நபர்களுக்கு கதவைத் திறக்காதீர்கள்.

யார் அழைத்தாலும் குடும்ப விழாக்களில் குதூகலத்துடன் பங்கெடுங்கள். எப்போதும் மகிழ்ச்சியாக வாழ்க்கையை அனுபவிப்பதாகவே சொல்லுங்கள். உங்கள் உடலில், மனதில் இருக்கும் சின்னச்சின்ன வருத்தங்களை, சோகங்களை எல்லோரிடமும் சொல்ல வேண்டும் என்ற அவசியம் இல்லை. மனதை மகிழ்ச்சிக்கு மட்டும் திறந்து வையுங்கள், மகிழ்ச்சியை மட்டுமே எண்ணுங்கள்.

மகிழ்ச்சியான ஓய்வு காலத்தை எக்காரணம் கொண்டும் மற்றவர்களின் சுயநலத்திற்காக இழக்காதீர்கள்.

வாழ்க்கை இனியது. முதுமை வாழ்க்கை அதனினும் இனியது. எப்போது மரணம் வந்தாலும் கவலையில்லை, நன்றாக வாழ்க்கையை அனுபவித்துவருகிறேன் என்ற சிந்தனையுடன் எழுந்தரியுங்கள். மகிழ்ச்சியான எண்ணங்களை, பழைய நினைவுகளை நினைத்தபடி தூங்குங்கள். எழும்போது, இன்றைய தினம் மகிழ்ச்சியாக இருக்கும் என்ற நம்பிக்கையுடன் எழுங்கள்.

நோய், வருத்தம் போன்றவைகளையும் ஏற்றுக் கொண்டு வாழ்ந்து பாருங்கள். இனியெல்லாம் மகிழ்ச்சியே.



வண்ணத்துப் பூச்சியாக மாறிவிடு..!

காலை உணவாக ஒரு பப்பாளி பழத்தை ரசித்து தின்றுகொண்டிருந்தார் ஞானகுரு. அப்போது ஒளியிழந்த கண்களுடன் வந்து நின்றார் ஒருவர். பாதி பழத்தைக் கொடுத்ததும் அதை மறுத்து, கேள்வியைக் கேட்டார்.

”சுவாமி, நான் நன்றாக வாழ்ந்தவன். என்னுடைய ஃபேக்டரியில் 500 பேர் வேலை செய்தனர். ஒரு தவறான முயற்சியில் தோல்வியை சந்தித்தேன். அந்த தோல்வியில் இருந்து பெரிய வெற்றி பெற வேண்டும் என்பதற்காக ஒரு புதிய முயற்சியைத் தொடங்கினேன். ஆனால், அதுவும் மிகப்பெரிய தோல்வி. இப்போது என் வீடு, ஃபேக்டரி என அத்தனையையும் இழந்து விட்டேன். சொந்த ஊரைவிட்டு புதிய ஊருக்கு வந்திருக்கிறேன். இனியும் நான் எதற்காக உயிர் வாழ வேண்டும்..?” என்று கேட்டார்.

“உனக்கு உயிர் வாழும் ஆசை அதிகமாக இருக்கிறாய். அதனால்தான், வெற்றி பெறுவதற்கான வழியைத் தேடி வந்திருக்கிறாய். உயிர் வாழும் ஆசை இல்லையென்றால், இங்கே வந்த நேரத்தில் நீ தற்கொலை செய்திருப்பாய்” என்று சிரித்ததும் தலை குனிந்தார்.

“செல்வம் யாருக்கும் சொந்தமானது அல்ல. இன்று உன்னிடம் இருப்பது நாளை வேறு ஒருவரிடம் இருக்கும். ஆனால், உன்னுடைய உடல், உன்னுடைய மனம், தன்னம்பிக்கை, தைரியம், அனுபவம், திறமை ஆகியவை என்றென்றும் உன்னுடன் இருக்கிறது. இத்தனை தகுதிகள் உன்னுடன் இருக்கும்போது, பணம் மட்டும் தானே போயிருக்கிறது. ஒன்றே ஒன்று போனதற்காக ஏன் வருந்துகிறாய்? இப்போதும் உன்னால் ஒரு தொழில் தொடங்க முடியும். அந்த தொழிலில் நீயே முதலாளியாகவும், நீயே தொழிலாளியாகவும் இரு. உன் அனுபவம், அறிவை முதலீடு செய்.

பழைய வாழ்க்கையை ஒரு கனவு என்று எண்ணிக் கொள். கனவு கலைந்ததும் நிஜ வாழ்க்கைக்கு வந்து விட்டாய். பணம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் உன் உடல் உறுதியாகவே இருக்கிறது. அதனால் புதிய மனிதனாக பிறப்பெடுத்துக்கொள்... கூட்டுப் புழுவில் இருந்து வண்ணத்துப் பூச்சியாக மாறி விட்டதாக எண்ணிக்கொள். தன்னுடைய சொத்தை எல்லாம் தூக்கிப் போட்டுவிட்டு புத்தர் உண்மையைத் தேடினார். நீ சொத்துக்களை எல்லாம் இழந்து புதிய வாழ்க்கையைத் தேடு” என்றார் ஞானகுரு. முகத்தில் புன்னகையுடன் கிளம்பினார் புதியவர்.

மகிழ்ச்சிக்கு

ஒரு வார்த்தை போதுமே...

இந்த உலகிலேயே மோசமான ஆயுதம் எது என்று கேட்டால், தயங்காமல் சட்டென்று சொல்ல முடியும்.

நாக்கு.

ஆம், நாக்கை விட வலிமையான ஆயுதம் வேறு எதுவும் இல்லை. ஒரே ஒரு வார்த்தையில் உயிரை விட்டவர்கள் எத்தனையோ பேர் உண்டு. ஒரே ஒரு வார்த்தைக்காக ஏங்கியவர்கள் எத்தனையோ பேர் உண்டு. வார்த்தை கொல்லவும் செய்யும், வெல்லவும் செய்யும்.

எனவே, பேசும் வார்த்தையில் கவனம் வைப்பது மிகவும் முக்கியம். வள்ளுவன் சொன்னது போன்று, நாக்கினால் சூடு போடக்கூடாது. நாம் பேசும் வார்த்தைகள், பிறருக்கு அன்பு தருவதாக, ஆறுதல் தருவதாக, துயரம் போக்குவதாக, நம்பிக்கை தருவதாக இருக்க வேண்டும்.

பேசும் வார்த்தைக்கு உயிர் இருக்க வேண்டும். அதாவது, உண்மையான உணர்ச்சியுடன் பேச வேண்டும். அப்போதுதான், பேச்சின் மூலம் ஒருவரை தொட முடியும். கனிவான வார்த்தைகள் உயிரைக் காக்கும். கருணையான வார்த்தைகள் காலம் அறிந்து சொன்ன வார்த்தைகள் துன்பத்தை தவிர்க்கும்.

தன்னம்பிக்கை வார்த்தைகள் மனச்சோர்வை விரட்டும். நகைச்சுவை வார்த்தைகள் மன இறுக்கத்தைத் தளர்த்தும். பண்பான வார்த்தைகள் இதயத்தைத் தொடும். பணிவான வார்த்தைகள் மரியாதையைக் கூட்டும். பொறுமையான வார்த்தைகள் கோபத்தை விரட்டும். மன அழுத்தத்தைக் குறைக்கும். வாழ்த்துகின்ற வார்த்தைகள் வசந்தத்தைக் கொடுக்கும்.

ஒரு யுத்தத்தை வார்த்தைகளால் தொடங்க முடியும். முடித்து வைக்கவும் முடியும். சில வார்த்தைகள் கசக்கும். சில வார்த்தைகள் இனிக்கும். சில வார்த்தைகள் இருட்டைப் போக்கும். சில வார்த்தைகள் மயில் இறகு போல் இதமாக இருக்கும். ஒரு ஆட்டோ முதுகில் எழுதப்பட்ட வாசகம், ‘உங்களின் வழிச் செலவு, எங்களின் வாழ்க்கை செலவு.’ - இந்த வாசகத்தைப் படித்தவர்களால், பேரம் பேச மனம் வராது. மீட்டருக்கு மேல் ஐந்து ரூபாய் போட்டுக் கொடுங்க சார் என்கிற வார்த்தைக்கும் இந்த வாசகத்திற்கு எத்தனை வேறுபாடு..?

ஒரு மொத்த விற்பனை மீன் கடையில் எழுதப்பட்டிருந்த வாசகம், ‘மீன் சாப்பிட வேண்டாம் என்று நினைத்தேன்.

www.gyaanaguru.com
www.gyaanaguru.com

மீனவன் சாப்பிட வேண்டாமா?'

இதை பார்த்தவுடன் புன்னகை வருகிறதல்லவா..? அதுதான் முக்கியம். வார்த்தைகளில் இல்லை வெற்றி. அது வெளிவரும் விதத்தில் தான் வெற்றி இருக்கிறது. எனவே, நினைக்கும் விஷயங்களை எல்லாம் பேசாமல், அதை செம்மை படுத்தி பேசிப்பாருங் கள்.. வெற்றி நிச்சயம். ஒரு ஹோட்டலில் எழுதி மாட்டி இருக்கும் வாசகம்...

'வீட்டு சமையலுக்கு ஒரு நாள் விடுமுறை விடுங்கள்.'

எண்ணங்கள் அழகானால் வார்த்தைகள் அழகாகும், வார்த்தைகள் அழகானால் வாழ்க்கையே அழகாகும். இலக்கிய மேதை லியோ டால்ஸ்டாய் ஒரு நாள் மாஸ்கோ நகர வீதியில் நடந்து சென்று கொண்டு இருந்தார். அவருக்கு எதிரே வந்த ஒரு பிச்சைக்காரர், "எஜமானே,,,எனக்கு எதாவது உதவிசெய்யுங்கள்,உணவு சாப்பிட்டு இரண்டு நாட்களாகி விட்டது" என்று உண்மையான பசியுடன் கேட்டான்.

ஆனால் அப்போது டால்ஸ்டாய் நிலைமையும் அப்படித்தான். அவரிடமும் கொடுப்பதற்கு எதுவும் இல்லை. எனவே அந்த பிச்சைக்காரரிடம் மிகவும் கனிவான குரலில், 'அன்பு சகோதரனே... என்னை மன்னித்துவிடு. என்னிடம் நீ கேட்கும் உதவியை செய்வதற்கு பணம் எதுவும் இல்லை' என்றார் உண்மையான வருத்தத்துடன். .

அவரது வார்த்தையை கேட்ட பிச்சைக்காரர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். "மிகவும் நன்றி எஜமானே... நீங்கள் நன்றாக இருக்க வேண்டும்" என்று சொன்னான்.

டால்ஸ்டாய்க்கு குழப்பம் வந்துவிட்டது. நாம் எதுவுமே தரவில்லை. ஆனால், அவரோ ஏதோ வாங்கியவர் போன்று மகிழ்ச்சி அடைகிறாரே என்று யோசித்து, அதை அவரிடமே கேட்டார்.

'எஜமானே, என்னை எல்லோரும் ஒரு சாதாரண மனிதனாகக்கூட கருதுவதில்லை. நீங்களோ சகோதரனே என்று அழைத்தீர்கள். பரிவுடன் உங்கள் நிலவரத்தைச் சொன்னீர்கள்... நீங்கள் என்னிடம் எதுவும் பேசாமலே போயிருக்க முடியும். என்னை மதித்து என் கோரிக்கையை ஏற்க முடியவில்லை என்று வருத்தப்பட்டீர்கள். அது நீங்கள் எனக்கு கொடுத்த விலை மதிக்க முடியாத வெகுமதி' என்று சிரித்தார். எனவே, வார்த்தைகளை கச்சிதமாக பயன்படுத்துங்கள். எல்லா வார்த்தைகளும் பிறருக்கும் உங்களுக்கும் மகிழ்ச்சியைத் தரட்டும்.

1 ஓர் ஆண்டு சந்தா 500 ரூபாய் செலுத்திவிட்டீர்களா..?

மனதுக்கு சந்தோஷம் தரும் ஞானகுரு மகிழ்ச்சி, உடலுக்கு ஆரோக்கியம் தரும் ஞானகுரு யாக்கை மின்னிதழ்களைப் பெறுவதற்கு ஆண்டு சந்தா ரூ.500 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட வங்கி எண் அல்லது மொபைல் எண்ணுக்கு சந்தா அனுப்பி ஆதரவு வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

செல்போன் : 7299753999

வங்கிக் கணக்கு: GYANAGURU PUBLICATION, UNION BANK OF INDIA, IFS CODE : UBIN0554847, Current Accout No. 548401010050639

க்யூஆர் கோடு மூலம் அனுப்பலாம். பணம் அனுப்பியதற்கான ஆதாரத்துடன் தங்களுடைய வாட்ஸ் ஆப் எண் அல்லது இமெயில் முகவரியை மேற்கண்ட செல்போனுக்கு அனுப்பிவையுங்கள். இதழ் தொடர்ந்து அனுப்பப்படும்.

தலையெழுத்தை மாற்றுவது எப்படி..?

கு ற்றாலத்திற்கு திடீர் பயணம் என்றதுமே கார் டிரைவர் சுந்தரத்திற்கு சுறுசுறுவென கோபம் வருவதையும், அதை அப்படியே அடக்கிக் கொள்வதையும் கவனித்தார் ஞானகுரு. அந்த கோபத்தை கார் ஓட்டுவதில் காட்டினார். முன்னே சென்று கொண்டிருந்த ஒவ்வொரு வாகனத்தையும் ஓவர்டேக் செய்து முன்னேறிக் கொண்டிருந்த சுந்தரம், ஒரு லாரியை முந்த முடியாமல்... அதன் வேகத்திலேயே பின் தொடர்ந்தார்.

இத்தனை அவசரம் வேண்டாமே என்று ஞானகுரு சொன்னதும், “நாற்பது வருஷமா வண்டி ஓட்டுறேன்... டிரைவிங் பத்தி யாரும் சொல்லித்தர வேண்டாம்...” என்று சொன்ன பதிலில் கோபம் எதிரொலித்தது. கோபம் அதிகரிக்கும்போது, முடிவு எடுக்கும் திறன் பாதிக்கும். அப்படித்தான் ஆனது சுந்தரத்திற்கு. முன்னே சென்ற லாரி வேகம் குறைப்பதைக் கணிக்காமல் விட்டதால், லாரியின் பின்புறத்தில் கார் சட்டென்று மோதியது. அந்த வேகத்தில் திக்கு தெரியாமல் திசைமாறி பாதையில் இருந்து விலகி... கண்ணை மூடித் திறப்பதற்குள் ரோட்டோரத்தில் இருந்த ஒரு பெரிய புளிய மரத்தில் முட்டி நின்றது. மோதிய காருக்குள் உருண்டு, முட்டி மோதி எழுந்த ஞானகுருவுக்கு நெற்றி, கை, கால்களில் அடிபட்டது.

www.gyaanaguru.com

ஞானகுரு
மகிழ்ச்சி
டிஜிட்டல் மாத இதழ் 4 - 8

நிறுவனர்
எஸ்.கே.முருகன்

ஆசிரியர்
எம்.நிர்மல்

வெளியீட்டாளர்
எம்.நிலா

வடிவமைப்பு
வி.கிராபிக்ஸ்
கே.எம்.பிரசன்னா

நிர்வாக இயக்குனர்
அரசு கிருத்திகா

முதன்மை செயல் அலுவலர்
மணியன் கலியமூர்த்தி

ஒருங்கிணைப்பாளர்
ரத்தினபாண்டியன்

ஞானகுரு பப்ளிகேஷன் மூலம் மகிழ்ச்சி இதழ் வெளியிடப்படுகிறது. அலுவலக முகவரி :

ஜி2, கோவிந்த் அபார்ட்மென்ட்,
6, ஏஜிஎஸ் காலனி 4வது தெரு,
கொட்டிவாக்கம், சென்னை - 41.
தொடர்புக்கு: +91 98409 03586, 72997 53999, 98844 53014
இ.மெயில் : skmnila1@gmail.com
இணையதளம் : www.gyaanaguru.com

www.gyaanaguru.com

கண்ணுக்கு மேல் புறத்தில் இருந்து ரத்தம் வழிந்து, கண்களை மறைத்தது. ஆனாலும், தனக்கு எதுவும் நேரவில்லை என்று உடல் உறுதியுடன் சொல்லவே, சட்டென ரத்தத்தை வழித்துப் போட்டுவிட்டு, சுந்தரத்தைக் கவனித்தார்.

சுந்தரம் ஸ்டீரியங்கில் சாய்ந்தபடி மயக்கமடைந் திருந்தார். அதற்குள் சத்தம் கேட்டு ஓடோடி வந்த சிலரது உதவியுடன் சுந்தரத்தை காரில் இருந்து வெளியே இழுத்து, மரத்தடியில் படுக்க வைத்து, நாடித் துடிப்பை பரிசோதித்தார் ஞானகுரு. பயப்படும் அளவுக்கு இல்லை, சுந்தரத்திற்கு உடலில் வேறு எங்கும் காயம் இல்லை. எனவே, சுந்தரத்தின் உடம்பை அழுத்தமாக நீவினார். மோதிய லாரியின் டிரைவர் ஓடி வந்து பார்த்தான். அவனுடைய கைலியை சட்டென்று கழட்டி, ஞானகுருவுக்கு வழிந்துகொண்டி ருந்த ரத்தத்தை துடைத்துவிட்டான். மேலும், ஒரு தண்ணீர் பாட்டிலை தேடி எடுத்துக் கொண்டுவந்து கொடுத்தான்.

லேசாக தண்ணீர் தெளித்ததும், திகில் நிறைந்த முகத்துடன் கண் திறந்தார் சுந்தரம்.

”மீண்டும் பிறந்து விட்டீர்கள்... வெல்கம்...” என்று சிரித்தார்

ஞானகுரு. சிரிக்கும்போது முகத்தில் ஆங்காங்கே வலி தெறித்தாலும் அதைக் காட்டிக் கொள்ளவில்லை.

உயிர் பிழைத்ததையே நம்பமுடியாமல் தடுமாறி எழுந்த சுந்தரம், எந்த காயமும் இல்லாத காரணத்தால் சில நிமிடங்களில் சுதாரித்துக் கொண்டார். யாரோ ஒருவர் வீட்டில் இருந்து மருந்து எடுத்துவந்து, தடவி, நெற்றியில் வழிந்த ரத்தத்தை நிறுத்த கட்டு போட்டார். அனைவருக்கும் நன்றி சொல்லி எழுந்ததும் சுந்தரத்திடம், “காரை எடுங்கள்...” என்றார் ஞானகுரு. காரில் வந்த இருவருக்கும் பெரிய அடி எதுவும் இல்லை என்றதும் சுற்றியிருந்த கூட்டம் சுவாரஸ்யமின்றி முழுமையாகக் கலைந்தது. காரின் முன்புறம் லேசாக அடிபட்டிருந்ததை கவனித்த சுந்தரம், “ராகு காலத்துல கிளம்புனா இப்படித்தான்...’’ என்று முனகியபடி பரிசோதித்தார். சுருட்டு குடித்துக் கொண்டிருந்த ஞானகுருவுக்கு ‘சுருக்’கென கோபம் வந்தது. அவருடைய பாணியில் பேசத் தொடங்கினார்.

”மனதை முழுமையாக டிரைவிங்கில் செலுத்தாமல், காலத்தின் மீது பழியைப் போடுகிறாய்... இன்று உங்கள் முதலாளியும், நீயும் இந்த காருக்குள் உயிர் விடவேண்டும் என்பதுதான் விதி. அதனை என் ரத்தம் கொடுத்து தடுத்திருக்கிறேன். விபத்துக்காக கலங்குவதை விட்டு, உயிர் பிழைத்ததற்காக சந்தோஷப்படு...” என்றார்.

எதிர்பார்த்தபடியே ஞானகுருவின் பதில் அவரை அதிர்ச்சி யடைய வைத்தது. திகில் நிறைந்த முகத்துடன் பேசினார்.

’’ஆமா சாமி, இந்த சனிப்பெயர்ச்சியில எங்க முதலாளி உயிருக்கு ஆபத்துன்னு சொல்லியிருந்தாங்க. அதைத்தான் நீங்க தடுத்திருக்கீங்க. உங்களைப் பத்தித் தெரியாம தப்பாப் பேசிட்டேன். மன்னிச்சிருங்க சாமி...’’ என்று அளவுக்கு மீறி பணிந்தார். எல்லா பணக்காரர்களுக்கும் ஏதேனும் கண்டம் இருப்பதாக கதை விட்டால்தானே ஜோசியர்களுக்கு பிழைப்பு ஓடும். ஞானகுரு குருட்டாம்போக்கில் சொன்னதை நிஜமாகவே நம்பினார் சுந்தரம் என்றார்.

புன்னகையுடன் பேசத் தொடங்கினார் ஞானகுரு. “ஜோதிடம், நல்ல நேரம், கெட்ட நேரம் போன்றவைகளில் நம்பிக்கை வைக்காதே... ஏனென்றால், உன்னுடைய தலையெழுத்து அல்லது முன் ஜென்மத்தில் நீ செய்த வினைகளே உன் வாழ்க்கையில் நன்மை, தீமை தருவதாக ஜோதிடன் சொல்வான். ஆனால், அவனே, ‘ஒருவர் பிறக்கும்போதுள்ள கிரகங்களின் நிலையே அவன் வாழ்க்கையைத் தீர்மானிக்கிறது’ என்றும் சொல்வான்.

தலையெழுத்தை மாற்றவே முடியாது என்று சொல்பவனே, சில பரிகாரங்கள் செய்தால் தீமைகளைக் குறைக்க முடியும் என்றும் சொல்வான். சனி பெயர்ச்சி, குரு பெயர்ச்சி போன்ற கிரகங்கள் உன் வாழ்க்கையில் மாற்றத்தை உண்டாக்குவதாகச் சொல்வான்.

ஒவ்வொரு கிரகங்களுக்கும் ஈர்ப்பு விசை இருக்கிறது. பூமிக்கு மிக நெருக்கமாக சந்திரன் இருப்பதால் அதன் ஈர்ப்பு விசை பூமியில் சில பாதிப்புகளை உண்டாக்கும் என்று சொல்வதைக்கூட ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், மற்றக் கிரகங்கள் எல்லாம் வெகு தொலைவில் இருப்பதால் அவைகளின் ஈர்ப்பு விசை பூமியை எட்டவே எட்டாது.

பூமியின் ஈர்ப்பு விசை கூட வானில் சில கிலோ மீட்டர் தூரம்தான் எனும்போது, மற்ற கிரகங்களின் ஈர்ப்பினால் பூமிக்கே எந்த பாதிப்பும் ஏற்படாத பட்சத்தில், அதில் வாழும் மனிதனுக்கு மட்டும் எப்படி பாதிப்பு ஏற்படும்?

ஒரு நாளைக்கு 16 முகூர்த்தம் என்று பிரித்து, அவற்றில் ராகு காலம் மற்றும் எம கண்டம் ஆகிய நேரங்களில் சுப காரியங்கள் செய்ய கூடாது என்கிறான். ராகு காலத்தில் குழந்தை பிறந்தால் வெளியே தூக்கிப் போட்டுவிடுவாயா..? எம கண்டத்தில் பணம் கொடுத்தால் வாங்க மாட்டாயா..? இந்த நேரம் என்பதே ஒரு மாயக் கணிதம். எனவே, தேவை இல்லாத சிக்கலில் நீயே போய் மாட்டிக் கொள்ளாதே, காரை எடு.. என்னை அருகே ஏதாவது ஒரு பஸ் ஸ்டாண்டில் இறக்கிவிட்டு ஊர் திரும்பு” என்றார்.

”கார் ஓடுமான்னு தெரியலையே...” என்று டூல் பாக்ஸை எடுத்தார்.

’’முதலில் நம்பிக்கை வை..’’ என்று சொல்லி அருகிலிருந்த மணலில் சாய்ந்து படுத்தார்

கொஞ்சநேரத்திலேயே கார் உறுமும் சப்தம் கேட்டது. உடனே சுந்தரம் முதலாளிக்கு விபத்து பற்றிய தகவலை செல்போனில் சொல்லி, என்னுடைய சக்தியால் உயிர் பிழைத்ததையும் சொன்னார். முதலாளியின் பதிலை பணிவுடன் கேட்டுக்கொண்டார். இரண்டு நாட்கள் லேட்டாக வந்தாலும் பரவாயில்லை, சாமிக்கு ஒரு மருத்துவமனையில் சிகிச்சையளித்து, அதற்குப் பின் குற்றாலத்தில் இறக்கி விட்டுத்தான் வரவேண்டும் என்று முதலாளி சொல்லி விட்டாராம். சுந்தரத்திற்கு இப்போது ஞானகுரு மீது அபிமானமும் பயமும் கூடியிருந்தது.

எனவே ரொம்பவும் பிகு செய்யாமல் காரில் ஏறிக்கொண்டார் ஞானகுரு. இப்போது காரை சீராக ஓட்டினார் சுந்தரம். ராஜபாளையத்தை நெருங்கியபோது நன்றாக இருட்டி, மழையும் பெய்யத் தொடங்கியது. ஒரு டீ குடித்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றவே ஒரு டீ கடை வாசலில் நிறுத்தச் சொன்னார். தனக்கு தாங்கிக் கொள்ளக்கூடிய வலிதான் என்று ஞானகுரு சொன்னபின்னரும் அருகே இருந்த மெடிக்கல் ஷாப்பில் இருந்து ஒரு மாத்திரை வாங்கி வலுக்கட்டாய மாகக் கொடுத்தார். மாத்திரையை வீசி எறிந்துவிட்டு டீ, பன் சாப்பிட்டதும் ஞானகுருவுக்குத் தெம்பு வந்தது.

மழை பலமாக பெய்யத் தொடங்கியது. மழை காலத்தில் காரில் பயணம் செய்வது அத்தனை சுகமான அனுபவம். மழையை வேடிக்கை பார்த்த நேரத்தில் ஞானகுருவுக்கு திடீரென பாடத் தோன்றியது.

www.gyaanaguru.com

மகிழ்ச்சியாக பாடிக்கொண்டே பயணித்தார்.

"சாமி... நான் உங்ககிட்ட ஒரு விஷயம் கேட்கலாமா?" என்று பீடிகை போட்டார் சுந்தரம்.

"உங்கள் அனுபவத்துக்குத் தெரியாத எதை நான் சொல்லிவிடப் போகிறேன்..." என்று பழைய சமாசாரத்தைக் குத்திக் காட்டினார்.

அந்த குத்தலை கண்டுகொள்ளாத சுந்தரம், "சின்ன வயசிலேயே, எங்க முதலாளி கோடீஸ்வரனா இருக்கார். இன்னும் எத்தனையோ பேர் சொந்த வீடு கட்டி வசதியா செட்டிலாயிட்டாங்க. ஆனா எனக்கு இத்தனை வயசாகியும் சம்பளம் பதினைஞ்சாயிரத்து சொச்சம்தான். என் புள்ளைய நல்லா படிக்க வைக்க முடியலை, அவனும் என்னைப் போலவே ஒரு இடத்துல சொற்ப சம்பளத்துக்கு வேலை பார்க்குறான். என் ரெண்டு பெண் குழந்தைக்கும் கல்யாணம் முடிச்சுக் குடுத்தாலும், எதுவும் சொல்லிக்கிறமாதிரி இல்லை. ஒருத்தி புருஷன் கூட மல்லுக்கட்டிக்கிட்டு இருக்கா. இன்னொருத்தி விட்டுட்டு வந்துட்டா. சில நேரம் யோசிச்சுப் பார்த்தா எதுவுமே நிம்மதியில்லாம... என்னத்துக்குப் பிறந்தோம்னு தோணுது..." என்று தோற்றுப் போன படைவீரன் போன்று கேட்டார். சுந்தரத்தின் தோளைத் தொட்டபடி பேசத் தொடங்கினார் ஞானகுரு.

"சிலை வைக்கப் பட்ட மனிதர்கள் அல்லது பணம், புகழ், செல்வாக்குடன் இருப்பவர்கள் மட்டுமே மனிதனாகப் பிறந்ததற்கு அர்த்தமுள்ளவர்கள் என்று நினைக்கிறாயா..? சமுதாயத்தின் பார்வைக்கு இவர்கள் வெற்றி பெற்றவர்களாக இருந்தாலும், அவர்களுக்குள்ளும் கடைசிவரை ஏதாவது ஒரு மனக்குறை, போராட்டம் நடந்து கொண்டுதான் இருக்கும். நீங்கள் சொந்த வீடு கட்ட முடியவில்லை என்று வருத்தப் படுகிறீர்கள். ஆனால், உங்கள் முதலாளி சொந்த வீட்டில் நிம்மதியாக வாழ முடியவில்லையே என வருந்துகிறார். வெளியில் இருந்து பார்ப்பவருக்கு, உங்கள் முதலாளியின் பிரச்னைகள், வருத்தங்கள் தெரிவதில்லை. அவரை ஒரு வெற்றியாளராகவே பார்ப்பார்கள். அதனால் தேவையின்றி மனசைக் குழப்பிக் கொள்ளாதீர்கள். எல்லோருமே முழுமையானவர்கள், மனிதர்கள் அத்தனை பேருமே வெற்றி பெற்றவர்கள்தான்..."

"ஆனா சிலர் அனுபவிக்கும் வசதி, சந்தோஷம் எங்களுக்குக் கிடைக்கிறதில்லையே..."

"ஆனால், ஒரு உண்மை தெரியுமா? சில நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மகாராஜாக்களும், சக்கரவர்த்திகளும் கூட இன்றைய சாதாரண மக்களைப் போன்று சொகுசாக, வசதிகளுடன் வாழ்ந்திருக்க முடியாது. ஏசி, ஹீட்டர், தொலைக்காட்சி, செல்போன், ஏரோப்ளேன் போன்ற வசதிகளுடன் வாழவில்லை என்பதால் அவர்களை தோற்றுப் போனவர்கள் என்பீர்களா?"

அமைதியாக இருந்தார் சுந்தரம்.

"அடுத்தவர்களுடன் ஒப்பீடு செய்யும்போதுதான் வெற்றி, தோல்வியும் உங்களைப் பாதிக்கிறது. உங்கள் வாழ்க்கையை மட்டும் நீங்கள் வாழுங்கள், அடுத்தவரைப் போன்று வாழ ஆசைப்பட்டால் கடைசிவரை துன்பம்தான். உங்களுக்கு மட்டுமல்ல ஒப்பிட்டுப் பார்ப்பவர்கள் அத்தனை பேரும் துன்பமே அடைவார்கள். இத்தனை வயது வரையிலும் வேலை பார்க்கும் உடல் நலன் வாய்த்திருப்பது எத்தனை பெரிய வரம், குழந்தைகள் அனைவரையும் கரையேற்றியது எத்தனை பெரிய சாதனை. இதுவே நீங்கள் நிறைவாக வாழ்ந்ததற்கும், வெற்றி பெற்றதற்கும் சாட்சி. முதலாளியாக இல்லையே என்று வருத்தப்படு வதை விட சிறந்த டிரைவராக இருப்பதற்கு மகிழ்ச்சி கொள்ளுங்கள். உங்கள் முதலாளிக்கு இத்தனை சிறப்பாக வண்டி ஓட்டத் தெரியாது என்று பெருமைப்படுங்கள்" என்றதும் சுந்தரம் முகத்தில் சிறு கீற்றாக புன்னகை வந்தது.



ஞானகுரு மகிழ்ச்சியாளர் சேர்க்கை ஆரம்பம்

ஆயுள் சந்தா 1 லட்சம் ரூபாய்

மகிழ்ச்சியைப் பரப்பும் ஒரு புதிய மதம் ஞானகுரு.

ஆரோக்கிய உடல், நிம்மதியான மனம், போதுமான பணம் ஆகியவற்றுடன் ஆறுதலான உறவுகள் அமைவதே மனிதருக்கு மகிழ்ச்சி தருகிறது. இவற்றை ஒவ்வொரு நபரும் அடைவதற்கு வழிகாட்டும் வகையில் ஞானகுரு மகிழ்ச்சி, ஞானகுரு யாக்கை, ஞானகுரு தமிழ்லீடர் போன்ற மின்னிதழ்கள் நடத்தப்பட்டு வருகின்றன. ஞானகுரு பதிப்பகத்திலிருந்து நம்பிக்கையூட்டும் நூல்கள் வெளியாவதுடன், அன்றாடம் புதிய செய்திகளுடன் ஞானகுரு இணையம் - ஞானகுரு (gyaanaguru.com) இயங்கி வருகிறது. இவை எல்லாமே நிறைய வாசகர்களுக்கு சென்றடைய வேண்டும் என்பதற்காக கட்டணமின்றி வழங்கப்படுகின்றன. இந்த சேவையைத் தொடர்வதற்கும் மகிழ்ச்சியை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லவும் ஞானகுரு மகிழ்ச்சியாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள். ஞானகுரு இயக்கத்தில் சேர்வதற்கு வாழ்நாள் சந்தா என ரூபாய் 1 லட்சம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நிறைய செல்வமும் பெரிய மனமும் உள்ளவர்கள் மட்டுமே இந்த இயக்கத்திற்கு செலவு செய்தால் போதும் என்பதற்காகவே இந்த தொகை நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது. மகிழ்ச்சியாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும் போது நம்முடைய வாசகர்கள், ஞானகுரு ஆதரவாளர்கள் மற்றும் சமூகம் மகிழ்ச்சியுடன் வாழத் தொடங்கும். ஞானகுரு மகிழ்ச்சியாளராக இணைப வருக்கு மதிப்பளிக்கும் வகையில் ஞானகுரு மின்னிதழ்களின் அச்சு இதழ் வீட்டுக்கு அனுப்பிவைக்கப்படும். ஞானகுரு பதிப்பக புத்தகங்களும் வெளியாகும் தருணங்களில் அனுப்பப்படும். அதோடு மனவளக் கலை பயிற்சியளித்து தேர்ச்சி சான்றிதழ் வழங்கப்படும். ஞானகுரு குடும்பத்தில் இணைவதற்கு அன்போடு அழைக்கிறோம்.

தொகை அனுப்ப வேண்டிய முகவரி:
Gyanaguru Publication, Union Bank of India,
Current Account No. 548401010050639,
IFSC CODE : UBIN0554847, PAN : AKLPJ7628N

மேலும் தொடர்புக்கு : **எஸ்.கே.முருகன்** -
9840903586, 7299753999

? விதியை மதியால் வெல்ல முடியுமா?

- எம்.முருகானந்தம், சிதம்பரம்.

ஞானகுரு :

விதிச்சது நடக்கும், விதிக்காதது நடக்காது என்பார்கள். விதியை மதியால் வென்றால், அதையும் விதிப்படி நடந்ததாகவே சொல்வார்கள். இவை எல்லாமே தோல்வி அடைந்தவர்களின் கற்பிதங்கள் மட்டுமே. அட்சரேகை, கடகரேகை போன்றவை மனிதனின் வாழ்வியலுக்காக உருவாக்கப்பட்ட கற்பனைக் கோடுகள் என்பது போலவே, விதி என்பதும் மனிதர்களின் கற்பனையே. இந்த தெளிவு இருப்பவர்களால் மட்டுமே வானத்தில் ஏறி பறக்க முடியும்.

ஞானகுரு பதில்கள்

? கடவுளை சென்றடையும் வழி என்ன?

- பி.சின்னராஜ், பொள்ளாச்சி.

ஞானகுரு :

கடவுளை அடைந்து என்ன சாதிக்க ஆசைப்படுகிறீர்கள்..? வாழ்வதற்காகவே இந்த பூமிக்கு பிறந்து வளர்ந்துள்ளீர்கள். இயற்கை இட்டிருக்கும் கட்டளையை செவ்வனே நிறைவேற்றுங்கள். கடவுள் என்று ஒருவர் இருந்தாலும், இதுவே அவரிடம் சென்று சேரும் சரியான வழியாக இருக்கும்.

? பணத்தை அதிகம் விரயம் செய்வது ஆணா... பெண்ணா?

- டி.கதிரேசன், நடுவப்பட்டி, மேல்மருவத்தூர்.

ஞானகுரு :

ஆடம்பரத்துக்கு ஆசைப்படுபவர்களில் ஆண், பெண் என்ற பாலின பேதம் கிடையாது. பெரும்பாலும் மாத சம்பளத்துக்காரர்கள் கணக்கு பார்த்தே செலவழிக்கிறார்கள். பெரிய ஹோட்டலில் சாப்பிடுவதை ஒருவர் விரயம் என்று நினைப்பதால் மட்டுமே அது உண்மையாகிவிடாது. பொதுவாக கைக்கு மீறிய பணம் வரும்போதே விரயம் ஆரம்பமாகிறது.



? துன்பத்திற்கு காரணம் ஆசை என்று புரிந்தாலும் ஆசையைக் கட்டுப்படுத்த முடியவில்லையே..?

- பி.எழிலரசி, வேட்டுவணூர்.

ஞானகுரு :

ஆசையை கட்டுப்படுத்த முடியதில்லை என்றால் திசை திருப்பலாம். லட்டு தின்பதற்கு விருப்பம் வரும் தருணத்தில் கடலை மிட்டாய் எடுத்துக்கொள்ளுங்கள். மிகப்பெரிய ஆசைகளே மிகவும் துன்பம் தரக்கூடியவை. எனவே, சின்னச்சின்னதாக ஆசைப்படுங்கள். சின்ன ஆசைகள் எளிதில் நிறைவேறிவிடும் என்பதால், அங்கே ஏமாற்றத்துக்கு இடமே இல்லை. சின்ன ஆசைகளை நிறைவேற்றி மகிழவில்லை என்றால், இந்த உலகை ரசித்து வாழ்வதற்கான காரணம் காணாமல் போய்விடும்.

www.gyaanaguru.com

? யாரெல்லாம் மகிழ்ச்சியுடன் வாழ்கிறார்கள்?

- சி.கனகசபை, திருச்சி.

ஞானகுரு :

மகிழ்ச்சி என்பது பிறரிடமோ அல்லது ஏதேனும் பொருட்களிடமோ இல்லை என்ற உண்மை தெரிந்த மனிதர்கள் மட்டுமே மகிழ்ச்சியாக வாழ முடியும். மகிழ்ச்சியை தனக்குள் தேடிக் கண்டுபிடிப்பவர்களால் மட்டுமே துன்பத்திலும், தோல்வியிலும், அவமானத்திலும் மகிழ்ச்சி அடையமுடியும். சின்ன விபத்து ஏற்படும் நேரத்தில், 'நல்லவேளையாக உசுர் தப்பிச்சிட்டோம்...' என்று குதூகலம் அடைபவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

? துணிச்சல், தன்னம்பிக்கை எனும் இரண்டில் எது ஒருவனை சாதனையாளராக மாற்றக்கூடியது?

- எம்.மகேந்திரன், சூலூர்

ஞானகுரு :

தன்னால் நீச்சலடித்து மறு கரையை அடையமுடியும் என்று நம்புபவனே ஆற்றில் குதிப்பான். அந்த நம்பிக்கை உள்ளவனுக்கே துணிச்சல் இருக்கும். நம்பிக்கையும் துணிச்சலும் சேரும்போதே வெற்றி கிடைக்கும். அதேநேரம், தன்னுடைய தகுதி அறியாத அசட்டுத் துணிச்சல் ஆபத்தை வரவழைக்கும்.

? நாகரிகம் வளராதிருந்தால் இன்று எப்படி இருக்கும்?

- ஏ.ராஜலட்சுமி, திருமங்கலம்.

ஞானகுரு :

இப்போது நாகரிகம் வளர்ந்துவிட்டது என்று யார் சொன்னது? இன்னும் 50 வருடங்கள் கழித்த தலைமுறையினர், இன்றைய வாழ்க்கை முறையை கேலியாகப் பார்த்து சிரிப்பார்கள் என்பதே உண்மை. எனவே, நாகரிகம் வளர்ந்துவிட்டதாக நினைப்பதில் எந்த உண்மையும் இல்லை.



? இறைவன் மீது பக்தியும் நம்பிக்கையும் வைப்பது வாழ்க்கை சங்கடங்களைத் தீர்ப்பதற்கு உதவுகிறதே..?

- எஸ்.மாரிகுமார், ஸ்ரீரங்கம்

ஞானகுரு :

தலைவலி, காய்ச்சல் என்று எந்த ஒரு நோய் வந்தாலும் மருத்துவரை சந்தித்து அத்தனை பிரச்னைகளையும் சொல்கிறார்கள். மருத்துவரும் மருந்து, மாத்திரைகள் எழுதித் தருகிறார். அதனை நம்பிக்கையுடன் சாப்பிட்டு உடல் நலம் அடைகிறார்கள். இதனை அப்படியே பக்திக்குப் பொருத்திப் பாருங்கள். கடவுளிடம் உங்கள் நோய் பற்றியும் வேதனைகள் பற்றியும் எடுத்துச் சொல்கிறார்கள். அவர் கேட்டுக்கொள்கிறார் என்றே நம்புகிறார்கள். ஆனால், அது மட்டுமே நோயை தீர்த்துவிடும் என்று யாரும் நம்புவதில்லை. எத்தனை பெரிய பக்திமான், ஞானி என்றாலும் கடவுளிடம் கோரிக்கை வைத்துவிட்டு, அப்படியே மருத்துவமனைக்குப் போயே சிகிச்சை எடுத்துக்கொள்கிறார்கள். இதில் பக்திக்கு என்ன அவசியம் இருக்கிறது..?

www.gyaanaguru.com

ஞானகுரு பதில்கள்

? பணத்திமிர் எப்போது அடங்கும்..?

- வி.முனியசாமி, அழகாபுரி.

ஞானகுரு :

மனிதன் படைப்பில் அதிஉன்னதமானது பணம். கடவுள் போன்று பணத்துக்கும் அதீத சக்தி உண்டு. பணம் எனும் ஆயுதத்தை நிதானமாகப் பயன்படுத்துபவனை, அது கேடயமாகப் பாதுகாக்கும். அதேநேரம், பணத்தை தன்னுடைய அகங்காரமாக காட்டுபவனை, அந்த பணமே அடக்கிவிடும்.

? மேடைப் பேச்சாளராக என்ன செய்ய வேண்டும்?

- பி.சகுந்தலா, அரவக்குறிச்சி

ஞானகுரு :

நல்ல ஞாபகசக்தி வளர்த்துக்கொள். எப்போதோ எங்கேயோ படித்த 10 சங்ககாலப் பாடல்களை மளமளவென மேடையில் ஒப்பித்துப் பார். அர்த்தமே புரியவில்லை என்றாலும் வலிக்கவலிக்க கை தட்டுவார்கள்.

? பொய்யர்கள் நன்றாக வாழ்வதுபோல் தெரிகிறதே?

- ஜி.குணசீலன், சாட்சியாபுரம், சிவகாசி.

ஞானகுரு :

பொய்யர் அல்லது நல்லவர் என்று பிறருக்கு சான்றிதழ் கொடுக்கும் தகுதியை உனக்கு யார் கொடுத்தது... அவரவர் வாழ்க்கையை அவரவர் வழியில் வாழ்கிறார்கள். பிறர் வாழ்க்கையைப் பார்த்து உன் வழியை மாற்றாதே... தொலைந்துபோவாய்.

? வாழ்வின் சங்கடங்களிலிருந்து எப்படி விலகிச் செல்வது?

- டி.அனிதா, திருவண்ணாமலை.

ஞானகுரு :

சங்கடத்திற்கு யார் காரணம் அல்லது எது காரணம் என்பதை ஆராய்ந்து பார். அந்த சங்கடத்துக்கு தீர்வு கண்டுபிடி. அதுதான் சங்கடத்திலிருந்து விலகும் வழி. ஏனென்றால், ஒரு சங்கடத்தில் இருந்து விலகினாலும், அடுத்து ஒன்று வரத்தான் செய்யும். எனவே, விலகிச்செல்வதைவிட புரிந்து ஏற்றுக்கொள்.

? நிம்மதியான வாழ்க்கை வாழ்வது யார்..?

- ஏ.சந்தியா மோகன், விருதுநகர்.

ஞானகுரு :

படுக்கையில் படுத்த பத்து நிமிடங்களுக்குள் தூங்கிவிடும் அத்தனை நபர்களும் நிம்மதியாளர்கள்..

www.gyaanaguru.com

? குலதெய்வ வழிபாடு பற்றி சுருக்கமாக சொல்லுங்கள்?

- சி.சுந்தர், பாளையங்கோட்டை

ஞானகுரு:

தந்தைவழி முன்னோர்களைக் கும்பிடுவது குலதெய்வ வழிபாடாக கருதப்படுகிறது. மானம் காப்பதற்கு தியாகம், வீரமரணம், தற்கொலை, கொலை என உயிர் விட்டவர் களே பெரும்பாலான குலதெய்வங்களாக இருக்கின்றனர். இவர்கள் பேயாக, பிசாசாக மாறி குடும்பத்தினரை தொந்தரவு செய்யக் கூடாது என்பதற்காக தொடங்கியதே இந்த வழிபாடு. பயத்தில் தொடங்கப்பட்ட இந்த வழிபாடு, இப்போது கூட்டாஞ்சோறு சாப்பிடவும், சொந்த சாதியை வளர்க்கவும் பயன்படுகிறது. வரலாறு படிக்கவேண்டியது மட்டுமல்ல பாதுகாக்கவும் வேண்டியதுதான். ஆனால் வழிபடும் அளவுக்குத் தகுதியானது அல்ல.

? உடலுக்கும் மனதுக்கும் சம்பந்தம் உண்டா?

- எஸ்.சிவகாமி, கடலூர்

ஞானகுரு :

உடல் என்ற பருப்பொருளை ஆட்டிவைப்பது மனமே. தலை வலிக்கு மாத்திரை போடலாம் அல்லது தானே சரியாகிவிடும் என்று முடிவெடுப்பது மனம். தற்கொலைக்கு உடலைத் தூண்டுவதும் மனம். ஆனால் உடலால் மனதை ஒருபோதும் இயக்க முடியாது. எனவே, நல்ல உடல் நலத்திற்கு ஆசைப்படுபவர்கள், முதலில் மனதை வசப்படுத்த கற்றுக்கொள்ள வேண்டும்.



? பலரும் வாக்கு தவறி நடக்கிறார்களே, ஏன் எதற்காக?

- பி.ராஜபாண்டி, கோவை

ஞானகுரு :

விவாகரத்து செய்யவேண்டும் என்பதற்காக யாரும் திருமணம் முடிப்பதில்லை. ஆனாலும், விவாகரத்து நடக்கத்தான் செய்கிறது. அப்படித்தான் ஒருசிலருக்கு சூழல் அனைத்து கேடுகளுக்கும் காரணமாக அமைகிறது.



? நிம்மதியாக இரவில் தூங்க வழி இருக்கா?

- ஏ.பிச்சை, ஸ்ரீவில்லிபுத்தூர்.

ஞானகுரு :

எத்தனை பெரிய துன்பத்தில் இருக்கும் மனிதனுக்கும், மாபெரும் ஆறுதல் தரக்கூடியது உறக்கம். ஆனால் உறக்கத்தை நீ தேடிப் போகாதே, அது உன்னைத் தேடி வரட்டும். அதுவரை உறக்கத்திற்கு காத்திருப்பது தெரியாதவகையில் வேறு ஏதேனும் செயலில் ஈடுபடு. உறக்கம் கண்களைத் தட்டியதும் படுக்கையில் விழு, நிம்மதியாக கண் விழிப்பாய்.

www.gyaanaguru.com

புதிய பார்வை, புதிய கண்ணோட்டத்தில்
இதிகாச நாவல்
ஞானகுரு பதிப்பகம் வெளியீடு
வண்ணப் புத்தகம்
600 ரூபாய்
கருப்பு வெள்ளை
300 ரூபாய்
இ-புக்
150 ரூபாய்
உங்கள் பிரதிக்கு 80725 89355 அழைக்கவும்
80725 89355 செல்போன் எண்ணுக்கு பணம், முகவரி அனுப்புங்கள். எங்கள் செலவில் புத்தகம் அனுப்பிவைக்கப்படும் க்யூ ஆர் கோடு மூலமாகவும், வங்கிக் கணக்கிலும் பணம் அனுப்பலாம்.
GYANAGURU PUBLICATION, UNION BANK OF INDIA,
IFS CODE : UBIN0554847,
Current Account No. 548401010050639
எஸ்.கே.முருகன்
நெருப்பு
சிகண்டியாக மாறிய அம்பையின் சரிதம்